மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்

வத்திராயிருப்பு

CC.No. 157/2024

தேதி – 15.05.2026

அ.சா.1 – கல்யாணக்குமார், த–பெ. கருப்பையா

(எதிரிகள் ஆஜர். வழக்கறிஞர் திரு. ராமசந்திரன் அவர்கள் ஆஜர்)

**சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை : –**

1) சம்பவம் நடைபெற்றதாக சொல்லக் கூடிய தேதியில் என்னுடைய கடையில் சுமார் 30 நபர்கள் இருந்திருப்பார்களா என்றால் இருந்திருப்பார்கள். அந்த கூட்டத்தில் யார் என்னை தாக்கினார்கள் என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். என்னுடைய கடையிலிருந்து எவ்வளவு ரூபாயை யார் எடுத்துச் சென்றார்கள் என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். எதிரிகள் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான்.

**மறு விசாரணை : – இல்லை .**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒப்பம்.ராமநாதன்.
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு